# DEPOSITION OF WITNESS

## (Chapter XXII Code of Criminal Procedure)

கோயம்புத்தூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கோயம்புத்தூர்.

| | | | |
|---|---|---|---|
| அமர்வு வழக்கு எண். | 195/2017 | அரசு தரப்பு | அ.சா.5 |
| பெயர் | ஆர்.அமீத் | ஜாதி | |
| தகப்பனார் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

Solemnly affirmed in accordance with the provisions of act X 1873 of 11th day of September 2025.

**(1** வது அக்ரம் ஜிந்தா**, 2** வதுஎதிரி சதாம் உசேன் என்கிற சதாம்**, 3** ஆம் எதிரி சம்சுதீன் என்கிற சம்சு என்கிற கூளை சம்சு **4** வது எதிரி அனு என்கிற அன்சாத்**, 5** ஆம் எதிரி ஜாபர் அலி என்கிற ஜாபர்**, 6** ஆம் எதிரி அப்துல் முனாப் என்கிற முனப் எதிரிகள் காணொலி மூலம் ஆஜர்படுத்தப்பட்டார்கள்**. )**

முதல் விசாரணை

நான் கோவை தெற்கு உக்கடம், முதல் வீதி, பிலால் எஸ்டேட், கதவிலக்கம் 63/2 என்ற விலாசத்தில் கடந்த 20 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் சென்னையில் கடந்த 2017 ஆம் ஆண்டில் வால்டேக்ஸ் ரோட்டில், குழந்தை தெருவில் உள்ள Pearl View என்ற கெஸ்டவுசில் மேலாளராக வேலை பார்த்து வந்தேன். எனக்கு பாரூக் என்ற ஒரு மகனும், பாத்திமா என்ற ஒரு மகளும் இருந்தார்கள். எனது மகன் பாரூக் பழைய இரும்பு வியாபாரம் செய்து வந்தார். எனது மகன் தனது வியாபாரத்திற்காக டி.வி.எஸ்.எக்ஸ் எல் ரக வண்டியை பயன்படுத்தி வந்தார். எனது மகனுக்கு கடந்த 2005 ல் திருமணம் நடந்தது. நான் எனது மனைவி, மற்றும் எனது மகன், அவரது குடும்பம் கீழ்தளத்திலும், எனது

மகள் மற்றும் அவரது குடும்பத்தார் முதல் தளத்திலுமாக ஒரே இடத்தில் குடியிருந்து வந்தோம். எனது மகன் பாரூக் குளத்தூர் மணி என்பவர் தலைமையில் இயங்கி வரும் திராவிட விடுதலை கழகத்தில் இருந்தார். அவர் கடவுள் மறுப்பு கொள்கையை பின்பற்றி வந்தார். கோவையில் 2016 ல் நடந்த சசிகுமார் கொலை வழக்கிற்காக கரும்பு கடை வீதியில் உள்ள டோல்கேட்டை கல் வீசி எறிந்து உடைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த சம்பவத்திற்கும், எனது மகனுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அப்பொழுது அந்த சமயத்தில் எனது மகன் பால் வாங்குவதற்காக சென்று கொண்டிருந்தார். அங்கிருந்த போலீசார் என் மகனை கூப்பிட்டு பெயர் விசாரித்தார்கள். அவர் பெயரை கேட்டதும் போலீசார் குனியமுத்தூர் காவல் நிலையத்திற்கு கூட்டி சென்று விட்டார்கள். அதன் பிறகு என் மகன் மீது வழக்கு பதிவு செய்து குண்டாஸ் வழக்கில் சேலம் மத்திய சிறையில் அடைத்து விட்டார்கள். என் மகள், குளத்தூர் மணி, நேருதாஸ் ஆகியோர் குண்டாஸை எதிர்த்து மனு தாக்கல் செய்து அவரை வெளியில் அழைத்து வந்தார்கள். எனது மகனுக்கு ஹனபா என்ற மகள் இருக்கிறார். அவரது பிறந்த நாளை தி.க கட்சியை சேர்ந்த எனது மகனின் நண்பர்கள் அனைவரும் கொண்டாட வந்திருந்தார்கள். அன்றைய தினம் எங்கள் வீட்டில் கடவுள் இல்லை, கடவுள் இல்லவேயில்லை என்ற ஒரு பதாகை இருந்தது. அதை எனது பேத்தியை பிடிக்க வைத்து எனது மகன் அதை முகநூலில் வெளியிட்டார். அதனால் நண்பர்கள் மூலம் எனது மகனுக்கு மிரட்டல்கள் வந்தது. எனது மகன் சிறையில் இருக்கும்பொழுது சதாம்உசேனும், ஜாபர் அலியும் எங்கள் வீட்டிற்கு வந்து எனது மனைவி, மருமகளிடம் " நீங்களாகவே பரூக்கை கொன்று விட்டால் அவன் சொர்கத்திற்கு சென்று விடுவான், அல்லது நாங்கள் அவனை கொலை செய்து விடுவோம் " என்று கூறினார்கள். என் மகன் கொலை செய்யப்பட்ட நாள்

16-03-2017 ஆகும். எனது மகன் கொலை செய்யப்பட்ட விவரத்தை எனது மைத்துனர் மொய்தீன் சென்னையில் இருக்கும் எனக்கு தொலைபேசியில் கூறினார். அன்றைய தினம் இரவு 12.30 மணிக்குள் எனக்கு தகவல் கிடைத்தது. புல்லுக்காடு ரோடு, முனிசிபாலிட்டி என்ற இடத்தில் எனது மகனை ஆடு வெட்டுவது போன்று வெட்டி விட்டதாக மொய்தீன் எனக்கு தகவல் கொடுத்தார். பதறியடித்து நான் சென்னையிலிருந்து வந்தேன். அதற்கு முன்பு சுமார் 9.30 மணி அளவில் நான் எனது மகனுடன் பேசிக் கொண்டிருந்தேன். பின்னர் அரை மணி நேரம் கழித்து எனது மனைவியின் போன் மூலம் மனைவியிடமும், மகனிடமும் பேசிக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனது மகன் தனது மகளின் பிறந்த நாளின்போது நடந்த சம்பவத்தை என்னிடம் கூறினார். தான் மிரட்டப்படுவதாகவும் கூறினார். அதற்கு நான் அனைவரும் நம் இனத்தார்தான் அவர்கள் யாரும் எதுவும் செய்ய மாட்டார்கள் நீ தைரியமாக இரு என்று நான் கூறினேன். உன் கருத்து சுதந்திரத்தை உன்னோடு வைத்துக் கொள் நீ யாரிடமும் அதை பற்றி பேச வேண்டாம் என்று கூறினேன். என் மகன் படுகொலை செய்யப்பட்டது சம்மந்தமாக எனது மருமகள், எனது மனைவி, மற்றும் எனது உறவுக்காரர் அபுதாகீர் ஆகியோர் கடைவீதி காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளித்தார்கள். எனது மருமகள் புகார் கொடுக்க அதை எனது உறவினர் அபுதாகீர் எழுதி கொடுத்தார். என் மகன்படுகொலை செய்யப்பட்ட மறுநாள் சுமார் 11 மணி அளவில் கோயமுத்தூருக்கு வந்து ஜி.எச் யில் எனது மகனின் உடலைப் பார்த்தேன். எனது மகனை நான் பார்க்கும்பொழுது கழுத்து வெட்டப்பட்டு, மார்பு, கை, கால் பகுதிகளில் ரத்தக்காயங்களுடன் பிணமாக கிடந்ததார். எனது மகன் கொடுரமாக கொலை செய்யப்பட்டுள்ளார். அதனால் அவரது மனைவியும், மகளும் அனாதையாக இருக்கிறார்கள். என் மகனை அடக்கம் செய்த பிறகு

18-03-2017 ஆம் தேதி கடைவீதி காவல் துறையினர் என்னை விசாரித்தார்கள். அதன் பின்னிட்டு 16-04-2017 ஆம் தேதி சிறப்பு போலீஸ் என்னை விசாரித்தார்கள். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் அ.த.சா.ஆ.4 புகைப்படங்களில் உள்ள வண்டியைத்தான் எனது மகன் பயன்படுத்தி வந்தார். (இந்த கேள்விக்கு 5 ஆம் எதிரியின் தரப்பில் ஆட்சேபிக்கப்பட்டு, அவரது ஆட்சேபணை பதிவு செய்யப்படுகிறது) மற்ற புகைப்படங்கள் இறந்துபோன எனது மகனின் புகைப்படங்கள் ஆகும்.

**1, 3** மற்றும் **6** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எங்களது பூர்வீகம் தூத்துக்குடி மாவட்டமாகும். நான் பிறப்பிலேயே முஸ்லீம் ஆகும். நான் குரான் படிப்பேன். அதன்படி நடப்பேன். முஸ்லீம்களுக்கு ஐந்து கடமைகள் உண்டு. அதிலிருந்து நான் தவறுவதில்லை. முஸ்லீமாக இருந்தால் குரான்மீதும், இறைவன்மீதும், இறைத்தூதர் மீதும், நம்பிக்கை இருக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். தூத்துக்குடியில் இருக்கும்வரை எங்கள் ஊரில் உள்ள பள்ளிவாசலில் தொழுவோம். அதன்பின்னர் சென்னைக்கு சென்று வாழ துவங்கினேன். சென்னையில் உள்ள வால்டேக்ஸ் ஏரியாவில் குடியிருந்தேன். அங்கு வால்டேக்ஸ் ரோட்டில் உள்ள மசூதிக்கு செல்வேன். எனக்கு இறை நம்பிக்கை உண்டு. எங்கள் சமூதாயத்தில் முஸ்லீம் ஆக வேண்டும் என்றால் சுன்னத் செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரிதான். எனது மகனுக்கும் சுன்னத் செய்யப்பட்டது. சுன்னத் என்பது முன்தோலை வெட்டி எடுப்பதாகும். 10 ஆம் வகுப்பு படிக்கும்வரை எனது மகன் சென்னையில்தான்

படித்தார். ஆரம்பத்திலிருந்தே எனது மகன் மசூதிக்கு வரமாட்டார். 2004 ல் நாங்கள் கோயமுத்தூரில் குடியேறினோம். சென்னையில் ஒரு கொலை வழக்கில் என்னை சந்தேகப்பட்டு சேர்த்தார்கள் என்று குடும்பத்துடன் நான் கோயமுத்தூருக்கு வந்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சென்னையில் வசித்தபொழுது அ.தி.மு.க வில் சேகர் பாபுவிற்கு நேர்முக உதவியாளராக இருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சமயத்தில்தான் பிரச்சனை ஏற்பட்டு நான் கோயமுத்தூருக்கு வந்தேன் என்றால் சரியல்ல. சென்னையில் பிளாட்பாரத்தில் நான் ஒரு வண்டியில் டிபன் கடை நடத்தி வந்தேன். போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருப்பதாக சொல்லி கடை நடத்த முடியாமல் போன காரணத்தினால் கோயமுத்தூருக்கு பிழைப்பிற்காக வந்து விட்டேன். 2010 ல் சென்னையில் லாட்ஜில் வேலைக்கு சேர்ந்தேன். அதற்கு ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை. நான் உண்மையில் அரசியலில்தான் இருந்தேன் என்றும், லாட்ஜில் வேலை எதுவும் வேலை எதுவும் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. அல்லாவின் மீது நம்பிக்கை இல்லையென்றால் முஸ்லீமாக இருக்க இயலாது என்று சொன்னால், சரியல்ல. நான் நம்பிக்கை வைத்தால் எனது மகனும் நம்பிக்கை வைக்கவேண்டும் என்ற கட்டாயமில்லை. எனது மகனை இஸ்லாம் முறைப்படிதான் அடக்கம் செய்தோம் என்றால் சரிதான். ஒருவர் இஸ்லாத்தை பின்பற்றினாலும், பின்பற்றாவிட்டாலும் முஸ்லீமாக பிறந்த விட்டால் அவரை எங்கள் முறைப்படிதான் அடக்கம் செய்யப்படவேண்டுமென்பது முறை. அதன்படி அடக்கம் செய்தோம். எனது மகனுக்கு முஸ்லீம் சடங்குகளின் முறையில்தான் திருமணம் நடந்தது. எனது மகன் இரட்டை வேடம் போட்டார் என்றும், அவர் முஸ்லீம் மதத்தை விட்டு வெளியேறவில்லை என்றும், அவர் சுய லாபத்திற்காக தி.க.வில் இருப்பதாக

காட்டிக் கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. அவர் இறக்கும்வரை கடவுள் மறுப்பு கொள்கையோடுதான் கடைசி வரை இருந்தார். எனது மகனுக்கு சுன்னத் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நானும் திராவிட கொள்கையில் இருந்தேன் என்றும், அ.தி.மு.க வில் இணைந்து அரசியலில் இருந்து அதை தற்பொழுது மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சென்னையில் இருந்த சமயம் எனது மகன் கோயமுத்தூரில் இருந்தார். எனது மகன் திராவிட கழகத்தில் இருந்தது, அதனால் ஏற்பட்ட விரோதம் போன்றவைகள் எனக்கு நேரடியாகத் தெரியாது எனது மகன் கூறி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மகன்மீது குண்டாஸ் வழக்கு தாக்கல் செய்தது போன்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. கோவையில் நடந்த சசிகுமார் கொலை வழக்கு பற்றியோ, அதன் தொடர்ச்சியாக டோல்கேட்டில் நடந்த ஆர்ப்பாட்த்தை பற்றியோ எனது மகன் கைது செய்யப்பட்டு குண்டாஸில் உள்ளே சென்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது மனைவி மற்றும் மகள் கூறி எனக்கு அந்த விவரங்கள் தெரியும். போலீசார் என்னை இந்தவழக்கு சம்மந்தமாக விசாரிக்கும்பொழுது " கோவையில் 2016 ல் நடந்த சசிகுமார் கொலை வழக்கிற்காக கரும்பு கடை வீதியில் உள்ள டோல்கேட்டை கல் வீசி எறிந்து உடைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த சம்பவத்திற்கும், எனது மகனுக்கும் எந்த தொடர்பும் இல்லை. அப்பொழுது அந்த சமயத்தில் எனது மகன் பால் வாங்குவதற்காக சென்று கொண்டிருந்தார். அங்கிருந்த போலீசார் என் மகனை கூப்பிட்டு பெயர் விசாரித்தார்கள். அவர் பெயரை கேட்டதும் போலீசார் குனியமுத்தூர் காவல் நிலையத்திற்கு கூட்டி சென்று விட்டார்கள். அதன் பிறகு என் மகன் மீது வழக்கு பதிவு செய்து குண்டாஸ் வழக்கில் சேலம் மத்திய சிறையில் அடைத்து விட்டார்கள்" என்று

நான் போலீசாரிடம் கூறினேன். நான் கூறியவாறு கூறிய விதத்தில் எனது மகனின் நடவடிக்கைகள் எதுவும் இல்லையென்றும்,வழக்கிற்காக சொல்லிகொடுத்து நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2** மற்றும் **4** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு முகநூலைபற்றி எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பவ வருடத்தில் ஜனவரி மாதத்தில் கோவை வந்தேன். கோவையில் எங்கள் வீட்டிற்கும், பஜார் காவல் நிலையத்திற்கும் சுமார் 2 கி.மீ தொலைவு இருக்கும். கடைவீதி போலீசார்தான் முதலில் என்னை விசாரித்தார்கள். பஜார் போலீசார் என்னை விசாரிக்கும்பொழுது " எனது மகன் சிறையில் இருக்கும்பொழுது சதாம்உசேனும், ஜாபர் அலியும் எங்கள் வீட்டிற்கு வந்து எனது மனைவி, மருமகளிடம் " நீங்களாகவே பரூக்கை கொன்று விட்டால் அவன் சொர்கத்திற்கு சென்று விடுவான், அல்லது நாங்கள் அவனை கொலை செய்து விடுவோம் " என்ற விவரத்தை நான் கூறவில்லை என்றால், நான் கூறினேனா இல்லையா என்று தற்போது ஞாபகமில்லை, காரணம் நான் பதட்டத்தில் இருந்தேன். அந்த சமயத்தில் நான் சென்னையில் இருந்தேன். ஆனால் அது சம்மந்தமாக நாங்கள் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் கூறியவாறு கூறிய விதத்தில் சதாமோ, ஜாபர் அலியோ எங்கள் வீட்டிற்கு வந்து எந்தவிதமான மிரட்டலும் விடவில்லை என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சொல்லி கொடுத்து தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**5** எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1997 ல் நான் கோயமுத்தூரில் இருந்தேனா என்று சரியாக நினைவில்லை. 1998 ல் கோயமுத்தூரில் இருந்தேனா என்றும் தற்பொழுது எனக்கு நினைவில்லை. சம்பவம் நடந்த சமயத்தில் எனது மகனுக்கு 32 வயது இருக்கும். எனது மகனுக்கும், 5 ஆம் எதிரி ஜாபருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் 2 ஆம் எதிரி சதாம் உசேனுக்கும், 5 ஆம் எதிரி ஜாபர் அலிக்கும் எவ்வித அறிமுகமும் இல்லையென்று சொன்னால் சரியல்ல. முதலில் என்னை போலீசார் கோவையில் உள்ள அரசு மருத்துவமனையில் வைத்து பார்த்தார்கள் என்றால், பரூக்கின் தகப்பனார் என்ற முறையில் என்னை பார்த்தார்கள். அந்த சமயத்தில் மருத்துவமனை வளாகத்தில் சுமார் 100, 150 பேர் இருந்திருப்பார்கள். அப்பொழுது மருத்துவமனையில் எனது மனைவியோ, மருமகளோ, எனது மகளோ இல்லை. நான் தகவலை கேள்விப்பட்டு கோவை வந்தவுடன் எனது மனைவியிடமோ, மகளிடமோ, மருமகளிடமோ நான் இந்த வழக்கை பற்றி எதுவும் கேட்கவில்லை. நான் பத்திரிக்கை மூலமாக கோவையில் சசிகுமார் கொலை வழக்கை பற்றி கேள்விப்பட்டுள்ளேன். சசிகுமார் கொலை வழக்கு சம்மந்தமாக 239 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட விவரத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்னர் கோவையில் வைத்து குளத்தூர் மணியை நான் மருத்துவமனையில் வைத்து பார்த்தேன். இந்த வழக்கு சம்மந்தமாக நானும், குளத்தூர் மணியும் கருத்து பரிமாறிக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. குளத்தூர் மணி சுமார் 2 - 1/2 மணி நேரம் மருத்துவமனையில் இருந்தார். நான் மருத்துவமனையில் குளத்தூர் மணியோடுதான் இருந்தேன். அப்பொழுது

குளத்தூர் மணியிடம் போலீசார் வாக்குமூலம் எதுவும் பெற்றார்களா என்று எனக்கு தெரியாது. என்னை மருத்துவமனையில் போலீசார் விசாரிக்கும்பொழுது தோராயமாக எத்தனை போலீசார் மருத்துவமனையில் இருந்தார்கள் என்று எனக்கு தற்பொழுது நினைவில்லை. சுமார் 1/2 மணி நேரம் போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்தவர் சீருடையில் இல்லை. நான் கூற அவர் எழுதினார். அந்த நபரின் பெயரோ, அவரது பதவியோ எனக்கு தற்பொழுது தெரியாது. எழுதியதை அந்த நபர் எனக்கு படித்து காண்பித்தாரா என்று தற்பொழுது எனக்கு நினைவில்லை. அதே நபர்தான் என்னை இரண்டாவது முறையும் விசாரித்து வாக்குமூலம் பெற்றாரா என்றால் எனக்கு அதைபற்றி ஞாபகமில்லை. என்னை ஒருமுறைதான் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். என்னை காவல் நிலையத்தில் வைத்து 18-03-2017 ல் விசாரித்தார்கள். காவல் நிலையத்தில்வைத்து யார் என்னை விசாரித்தார்கள், யார் எழுதி கொண்டார்கள், அவரது பதவி என்ன என்று எனக்கு ஞாபகமில்லை. குண்டாஸிலிருந்து எனது மகனை வெளியில் கொண்டுவர உயர்நீதிமன்றத்தில் மனு போட்ட விவரம் எனக்கு தெரியாது. குளத்தூர் மணியை அணுகி எனது மகனை எனது சார்பாக வெளியே எடுக்குமாறு நான் கேட்டேனா என்றால், இயக்கத்தன் சார்பாக அவர்களாகவே மனு தாக்கல் செய்து என் மகனை வெளியே எடுத்தார்கள். எனது மகனுக்கு எதிராக எத்தனை முறை தடுப்பு காவல் உத்திரவு போடப்பட்டது என்று எனக்கு தெரியாது. 1997, 1998 மற்றும் சசிகுமார் கொலை வழக்கு சமயத்தில் இரு சமூகத்தாரிடையே முன்விரோதங்கள் ஏற்பட்ட விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. குளத்தூர் மணியின்மீது பல்வேறு வழக்குகள் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. சசிகுமார் கொலை சம்மந்தமாகத்தான் எனது மகனும் கொலை செய்யப்பட்டார் என்று

சொன்னால் அதை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. எனது மகனின் பிரேதம் இருந்த கோவை அரசு மருத்துவமனையில் இயக்கத்தை சேர்ந்த 100, 150 நபர்கள் அங்கு இருந்தார்கள். போலீசார் என்னை ஒருமுறைதான் விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். எனது வாக்குமூலத்தை படித்து பார்க்குமாறு நகல் எதுவும் என்னிடம் கொடுக்கவில்லை. எனக்கு எஸ்.ஐ.டி யிலிருந்து சாட்சியம் அளிப்பதற்கு அழைப்பாணை வந்தது. அழைப்பாணை கொடுத்து மூன்று நாட்கள் இருக்கும். கோயமுத்தூரில் உள்ள வீட்டில் வைத்து கொடுத்தார்கள். அதன் பின்னர் நான் போலீசாரிடம் சென்று விவரம் எதுவும் கேட்கவில்லை. நான் கூறியதுபோல் எனது வாக்குமூலம் கையால் எழுதப்படவில்லை என்றும், அது கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும்,தற்பொழுது போலீசார் சொல்லிக் கொடுத்து அதற்கேற்றாற்போல் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கின் 5 ஆம் எதிரி ஜாபர் அலிக்கும், இந்த வழக்கின் மற்ற எதிரிகளுக்கும் எவ்வித அறிமுகமோ, பழக்கமோ, நட்போ இல்லை என்று சொன்னால் சரியல்ல. நானும், எனது குடும்ப உறுப்பினர்கள், குளத்தூர் மணி அனைவரும் கலந்து ஆலோசித்து தவறான ஒரு வழக்கை எதிரிகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கொடுத்த தவறான புகாரினால் உண்மை குற்றவாளிகள் தப்பித்து விட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. இஸ்லாமியராக பிறந்து இஸ்லாத்தில் நம்பிக்கை இல்லாதவர்களையும், பிற மதத்தினரையும் காபீர் என்று கூறுவார்கள் என்றால் சரிதான். இஸ்லாத்திற்கு எதிராக எதுவும் பேசவேண்டாம் என்று நான் கூறியும் எனது மகன் எதுவும் கேட்கவில்லை. பிற மதத்தினரின் விரோதத்தை சம்பாதிக்கவேண்டாம் என்று நோக்கில் தவறான ஒரு புகாரை கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. எந்த தேதியில், எத்தனைமணிக்கு எனது

மனைவியையும், மருமகளையும் சதாம் உசேனும், ஜாபர் அலியும் மிரட்டினார்கள் என்று நான் குறிப்பிட்டு போலீசாரிடம் கூறவில்லை என்று சொன்னால் அதை பற்றி எனக்கு நினைவில்லை. உண்மையில் அவ்வாறு அவர்கள் மிரட்டியிருந்தால் உடனடியாக நாங்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்றும், அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெறாத காரணத்தினால்தான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்ததற்கும், போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திற்கும் நிறைய முரண்பாடுகள் உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

ஒம்/ஆர்.அமீத்,

Taken down by me/typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya
Principal District and Sessions Judge,
Coimbatore.